செய்தி வெளியீடு எண் :22 நாள் :17.07.2020

**தேனி மாவட்டம்**
**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி திட்டத்தின் கீழ்**
**பல்வேறு மருத்துவ காரணங்களுக்கு**
**முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்களுக்கு வழங்கப்படவுள்ளது**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :-**

*****

முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்கள் அறிவது, தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியின் கீழ் பல்வேறு மருத்துவ காரணங்களுக்கான நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் புற்றுநோய், கண்பார்வையற்றோர், பக்கவாதம், மனவளர்ச்சி குன்றியோர்க்கான நிதியுதவி ஆகிய நான்கு மருத்துவ நிதியுதவிகளுக்கு பிரதி மாதம் ரூ.7,000/-மும், மற்ற வகையான ஊனமுற்றோர்களுக்கு மருத்துவ நிதியுதவியாக ரூ.5,000/-மும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிதியுதவி பெறுவதற்கு திருமணமாகாத மற்றும் வேலைவாய்ப்பற்ற முன்னாள் படைவீரர்களின் சிறார்கள், இராணுவ ஓய்வூதியம் பெறும் முன்னாள் படைவீரர்களும் அவர்களைச் சார்ந்தோர்களும் தகுதியானவர்கள். மேலும், விவரங்களுக்கு தேனி மாவட்ட ஆட்சியர் அலுவகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலவத்தை உரிய மருத்துவச் சான்றுடன் அணுகவும்.

எனவே, இந்த அரிய வாய்ப்பை தேனி மாவட்ட முன்னாள் படைவீரர்கள் / சார்ந்தோர்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**